FWC

**யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன்- 2015

## Term Examination, June - 2015

| நாடகமும் அரங்கியலும் - I | புள்ளித்திட்டம் | தரம் :- 13 (2015) |
|---|---|---|

### பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1) – 1 | 11) – 3 | 21) – 1 | 31) – 1 |
| 2) – 2 | 12) – 4 | 22) – 2 | 32) – 2 |
| 3) – 3 | 13) – 3 | 23) – 3 | 33) – 2 |
| 4) – 4 | 14) – 2 | 24) – 4 | 34) – 3 |
| 5) – 5 | 15) – 1 | 25) – 5 | 35) – 3 |
| 6) – 1 | 16) – 5 | 26) – 5 | 36) – 4 |
| 7) – 2 | 17) – 2 | 27) – 4 | 37) – 3 |
| 8) – 3 | 18) – 3 | 28) – 2 | 38) – 1 |
| 9) – 4 | 19) – 4 | 29) – 4 | 39) – 3 |
| 10) – 5 | 20) – 4 | 30) – 5 | 40) – 4 |

(1 x 40 = 40 Gs;spfs;)

### பகுதி II

**1)** 1) ஒருவர் அல்லது பலர் சிலர்முன் கலைசார் விடயத்தை ஆற்றிக் காட்டுதல் / செய்து காட்டுதல் ஆற்றுகைக் கலை எனப்படும். ஆற்றுகைக்கு ஆற்றுவோர் பார்ப்போர் முதன்மை பெறுவர் ஆற்றுகைக் கலைகளாக இசை, நடனம், நாடகம், சினிமா, பலே, கூத்து, வில்லுப்பாட்டு, களக்கூத்து என்பன அடங்கும். (4 புள்ளி)

2) கலையின் இயல்புக்கேற்ப நுன்கலை, பயன்கலை என இரண்டாக வகுக்கலாம் பயன்கலைகளை கைவினைக் கலைகள் என்றும் கூறலாம் அத்துடன் நுன்கலைகளில் ஒரு சிலவும் கைவினைக் கலைக்குள் அடங்குகின்றன. இவை அழகையும் பயனையும் முதன்மையாக கொண்டு அமைக்கப்படுகின்றன. கைவினைக் கலைகளாக மட்பாண்டப் பொருட்கள், ஆபரணங்கள், பனைப்பொருட்கள், ஓவியம், சிற்பம் என்பனவும் அடங்கும் இது பயனைக் கருதி மீண்டும் உருவாக்கப்படும். (4 புள்ளி)

3) நாடகக் கலையின் சிறப்பியல்புகளை எழுதி அப்பண்புகளை விளக்குதல் வேண்டும்
6 பண்பு எழுதியிருப்பின் 3 புள்ளிகள்
4 பண்பு விளக்கியிருப்பின் 4 புள்ளிகள்)

நாடகக் கலையின் சிறப்பியல்பு

- மோதுகையை சித்தரிப்பது
- கணப்பிரசன்னமானது
- கூட்டுக்கலையாகும்
- உயிர்த்துடிப்புடையது
- நம்பிக்கைத் தன்மை உடையது
- நிகழ்த்திக் காட்டுவது
- தொடர்பாடல் உடையது
- போலச்செய்து காட்டுவது
- பார்ப்போருடன் ஊடாட்டம் உடையது
- சூழல், இடம், நேரம் கொண்டது (7 புள்ளி)

**2)** 1) உணர்வு நிலையினூடே தேங்கிக் கிடக்கும் மனவெழுச்சி உணர்வு வெளியேற்றப்பட்டு உள்ளம் தூய்மைப்படு நிலை கதாசிஸ் எனப்படும்
பார்ப்போரிடையே பயத்தையும் கழிவிரக்கத்தினையும் ஏற்படுத்துவதன் ஊடாக தீர்வு ஏற்படுகிறது
மனநின்மதி ஏற்பட்டு ஆத்மதிருப்தி கிடைக்கின்றது நெஞ்சுப்பாரம் நீங்குவது போன்ற நிலை உருவாகின்றது
இது கிரேக்க நாடகங்களைப் பார்ப்பதன் மூலம் இந்நிலை தோன்றும் எனக் கூறி விளக்குதல் வேண்டும். (4 புள்ளி)

2) காலம், இடம், இயக்கம் (செயல்) என்ற மூன்றையும் கூறி விளக்குதல் வேண்டும்(4 புள்ளி)

3) அரிஸ்ரோட்டில் கூறும் திறஜெடியின் கட்டமைப்பு ஆறு
அதே போன்று பரதர் கூறும் நாட்டில் சாஸ்திர கட்டமைப்பு ஐந்து
இரண்டையும் கூறி இரண்டையும் ஒப்பிட்டு விளக்குக. (7 புள்ளி)

**3)** 1) 1898ம் ஆண்டு மெஸ்கோ கலையரங்கு தோற்றுவிக்கப்பட்டது. இயற்பண்பு வாதம் இவ்வரங்களினூடாகவே வளர்ச்சி பெற்றது. இதன் பிதாமகராக அன்சோயின் காணப்பட்டார். இருந்தும் இதை உலகறியச் செய்தவர் ஸ்ரனிஸ்லவஸ்கி ஆவார்.
நாடகத்தில் எல்லாம் உண்மையாகவும் இயற்கையாகவும் இருக்க வேண்டும் என்பதில் கருத்தாய் இருந்தார்
அகவயம் சார்ந்த நடிப்பு முறைக்கு முதன்மை
பாத்திரம் பாத்திரமாக வாழுதல்
பார்போர் நிகழ்வுடன் ஒன்றிணைந்து போதல்
பயிற்சிக்கு முதன்மை வளங்குதல்
10 வகையான உளவியல் பயிற்சி (4 புள்ளி)

2) இவர் ஜேர்மன் நாட்டைச் சார்ந்தவர் காவியபாணி அரங்கமுறையை தோற்றுவித்தார். செய்து காட்டலுக்கு முதன்மை கொடுத்தார். பார்போரை சிந்திக்க வைத்தார். இதற்காக பல்வேறு உத்திகளைக் கையாண்டார்.
இயற்பண்பு வாதத்திற்கு எதிராக இதை முன்வைத்தார்
- கதை கூறும் பண்பு
- இடை வெட்டிய பாடல்
- குறியீட்டு கையாள்கை
- எடுத்துரைஞர் கையாள்கை
- படர்கையில் பேசுதல்
- அட்டையில் எழுதி தொங்கவிடல்

3) பிரேசில் நாட்டைச் சார்ந்த இவர் ஒடுக்கப்பட்டோருக்கான அரங்க முறையை உருவாக்கினார் இதனை மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தினார். யதார்த்தம் சாராத அரங்கக் கோட்பாட்டாளர் இவரது அரங்கு அரிஸ்ரோட்டலின் அரங்க அழகியல் கோட்பாட்டை முன்வைக்கும் அரங்காகும்.
- உடனடி படிம அரங்கை பல வடிவங்களில் வடிவமைத்தல்
- கண்ணுக்குத் தெரியாத அரங்கு படிம அரங்கு, வாத விவாத அரங்கு, சிகிச்சை அரங்கு எனப் பல்வகை அரங்க முறைகளை கூறுதல்
- உளவியல் தளை நீக்கத்திற்கு உரிய வகையில் இவருடைய நாடகம் அமைந்தது
- இவற்றுடன் ஏனைய மற்றைய அரங்க செயற்பாட்டுடன் ஒப்பிட்டு கூறுதல் வேண்டும்.

**4)** 1) நடிகர்கள் தமது மெய்ப்பாடுகள் மூலம் நாடகம் பார்ப்போருக்கு ஏற்படுத்தும் உணர்வே ரசமாகும் இவ் ரசத்தை பாவங்கள் உருவாக்குகின்றன. இவ் விளக்கத்துடன் எட்டுவகை ரசங்களை குறிப்பிட்டு உரிய பாவங்களை அட்டவணைப்படுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| சிருங்காரம் | - | காதல், அன்பு |
| ஹாஸ்ய | - | சிரிப்பு மகிழ்ச்சி |
| கருணா | - | சோகம் |
| பயாகை | - | பயம் |
| பீபத்ஸ் | - | அருவருப்பு |
| அற்புதம் | - | வியப்பு |
| வீர | - | உற்சாகம் |

2) ஆங்கிகம் அபிநயம் - உடல்வழிச் சித்தரிப்பு
வாச்சிக அபிநயம் - குரல்வழிச் சித்தரிப்பு
ஆஹார்ய அபிநயம் - காண்பியவழிச் சித்தரிப்பு
சாத்வீக அபிநயம் - உணர்ச்சிவழிச் சித்தரிப்பு
மேற்கூறிய அபிநயம் கூறி விளக்குதல் வேண்டும்

3) நாட்டிய சாஸ்திரத்தில் குறிப்பிடப்படும் இரு வகை நடிப்பு முறைகள் தர்மிகள் எனப்படும்.

| இல | லோகதர்மி | நாட்டய தர்மி |
|---|---|---|
| 1 | இயல்பான கதை | இயல்பற்ற கதை |
| 2 | தொல்காப்பியம் உலகியல் வழக்கு என்கிறது | தொல்லாக்கியம் நாடக வழக்கு என்கிறது |
| 3 | பாத்திரங்களின் இயல்பான நடத்தையை காட்டுவது | மோடியுற்ற அங்க அசைவுகளைக் கொண்டது |
| 4 | இயல்பான அபிநயங்களைக் கொண்டது | ஒரு பாத்திரத்தை பலர் ஏற்று நடிப்பர் |
| 5 | போலித்தன்மை அற்றது | உரையாடல் பாடல் லயத்தில் அமைதல் |

**5) சிலப்பதிகார அரங்கு**

- இக்கால அரங்கு சிற்ப நூலார் விதிப்படி அமைக்கப்பட்டது
- இடைப்பால் நிலமே இவ்வரங்கிற்கு முக்கியமானதாகும்
- மேடை 7 கோல் அகலம் 8 கோல் நீளம் நிலத்திலிருந்து ஒரு கோல் உயரம் கொண்டதாக இருத்தல் வேண்டும்
- நாடகமாதர் உட்புகவும் வெளிச்செல்லவும் இரண்டு வாயில் இருந்தன
- கூத்தர் மறைந்து செல்லுமிடம் தங்கியிருக்க குடிசைப் பள்ளி மன்னர் சுற்றத்தோடிருக்க குடிசைப் பள்ளியும் உண்டு
- அரங்கில் 4 வகை வருணபூதங்களின் ஓவியம் தீட்டப்பட்டிருந்தன
- மூன்று வகையான திரைகள் (எழினிகள் பயன்படுத்தப்பட்டன (ஒருமுக எழினி, பொருமுக எழினி சுரந்துவரல் எழினி)

**யப்பானிய கபுக்கி அரங்கு**

- ஜப்பானில் காணப்படும் புராதன பாரம்பரிய நாடகவடிவம்
- ஜனரஞ்சக நாடக மோடியைச் சார்ந்தது
- பாடல், ஆடல், நடிப்பு இனைந்ததே கபுக்கி வடிவம்
- மேலைத்தேய படச்சட்ட மேடையை உள்வாங்க (கணாமிச்சி) பாலப்பாதையை இணைத்து வடிவமைத்தனர்
- பார்ப்போட் இடம் (பெட்டி) இருக்கைகளுடன் அமைக்கப்பட்டுள்ளது
- மூடப்பட்ட உள்ளக அரங்காகும்
- பிரதான அரங்கிற்குமுன் கணாமிச்சி எனும் நீண்ட பாலப் பாதை காணப்படும்

**புறொசீனியம் அரங்கு**

- படச்சட்ட அரங்கின் அறிமுகமாகும்
- இத்தாலியே இதன் தாயகமாகும்

**6)** 1) வானெலி நாடகம்

- குரல் ஒலியின் ஊடாக பாத்திர உணர்வு, சம்பவங்களை விளக்கிக் கொள்ளும் நாடக வகையாகும்
- கேட்டவை பிரதானப்படுத்தியது
- மனத்தினை மேடையாகக் கொண்டு நிகழ்வுகளை கற்பனை செய்து அறிய வேண்டும்
- ஒரு நடிகனே பல பாத்திரங்களுக்கு ஏற்ற வகையில் தன்னை மாற்றிக் கொள்ளலாம்
- நேரடித் தொடர்பு இல்லை
- ஒளி, ஒப்பனை, காட்சிவிதானிப்பு போன்ற சாதனங்களின் பயன்பாடு இல்லை

2) **யப்பானிய பாவை அரங்கு**

- 17ம் நூற்றாண்டில் பிரசித்தி பெற்றது
- பாவை அரங்கிற்கான கல்லூரி ஒசாக்க வில் இயங்கியது
- பாவைகளை இயக்க தலைமை இயக்குனர் 2 உதவியாளர்களும் தேவைப்பட்டனர்
- பாவைகளை இயக்கும் மேடையில் பின்திரை காணப்படும்
- யுகா எனப்படும் இசைக்கலைஞர் மேடை காணப்படும்
- இம் மேடையில் ஜொறுறி, இசைவாசிப்பவர் இருவர் காணப்படுவர்
- ஜொறுறி என்பவர் பாவைகளிற்கு குரல் கொடுப்பவர்
- இசைப்பவர் 3 நரம்புகளைக் கொண்ட வாத்தியத்தை பயன்படுத்துவர்
- பாவையை இயக்கும் உதவியாளர்கள் உச்சிமுதல் உள்ளங்கால்வரை முழுக்கமூடிய கறுத்த உடை அணிவர்
- தலைமை இயக்குனர் அவ்வாறில்லை

3) பாண்டவர் வனவாசகம்

- பாரதக் கதையை மீள்நிகழ்த்திக் காட்டும் சடங்காகும்
- பாண்டவர்கள் வேடமிட்டு வனவாசம் செல்வர்
- வாள் மாற்றுச் சந்தியில் வாளை வீமன் தருமனிடம் இருந்து பெறுவார்
- வாளைப் பெற்றதும் அவரே வனவாச காலப் பொறுப்பை எடுக்கின்றார்
- பஞ்சபாண்டவர்களுடன் நேர்த்தியை நிறைவேற்றும் பொருட்டு மக்களும் இணைகின்றனர்

4) தஹுட்ட சன்னிய

- சிங்கள் மக்களின் சடங்கு சார் அளிக்கை வடிவம்
- சங்கபால மன்னனுக்கும் அரசிக்கும் பிறந்த அரச குமாரன் அநியாயமாகத் தனது தாயைக் கொலை செய்த தந்தையைப் பழி வாங்குதலைப் பற்றியது
- ருகுணு பிரதேசத்தில் நடைபெறும்
- இது நோய் தீர்க்கும் சாந்திச் சடங்காகும்
- இதில் நாடகப் பண்புகள் காணப்படுகின்றன

  உ + ம் :- அபிநயம், அரங்கு, அரங்கப் பொருட்கள், வேடஉடை

5) பலே ஆட்டம்

- பலே என்பது நடனப் பாணியினை ஊடகமாகக் கொண்ட அளிக்கை வடிவமாகும்
- இது 16ம் நூற்றாண்டில் இத்தாலியிலும் பிரான்சிலும் தோன்றியது
- 19ம் நூற்றாண்டில் உலகமெங்கும் வியாபித்த தொல்சீர் நாடக வடிவங்களில் ஒன்று
- பின்னணிக் காட்சிகளுக்காக ஒளியூட்டுகை வேடஉடை, ஒப்பனை போன்ற பல்வேறு அம்சங்கள் பயன்படுத்தப்படும்
- பின்னணி இசையைப் பிரதானமாகக் கொண்டிருக்கும்

The National e-Learning Portal - The General Education